

# புனித லூர்து மாதா தேவாலயம்




45, ஜாலான் சிலிபின், 30100 ஈப்போ, பேராக் மேற்கு மலேசியா

**பங்கின் குருவானவர்கள்: அருள் தந். ரோபட் டேனியல் & அருள் தந். சைமன் ஆனந்த்**

**மறைத்திரு திருத்தொண்டர் சந்தனசாமி பீட்டர்**

Tel: 05-5279349 Fax: 05-5276671

அகப்பக்கம்: lourdesipoh.org மின் அஞ்சல்:olol@ololipoh.org


**திருத்தந்தையின் கருத்து** : குருவானவர்களும், அவர்களின் மேய்ப்புப்பணியும்: தங்கள் மேய்ப்புப்பணியில் சோர்வையும், தனிமையையும் அனுபவிக்கும் குருவானவர்கள், ஆண்டவருடன் தங்களின் நெருக்கத்தில் உதவியையும், ஆறுதலையும் தங்களின் சகோதர குருவானவர்களிடமிருந்து நட்புறவையும் பெற்றிட வேண்டுமென்று

**ஜூலை மாத கரு** : நான் கிறிஸ்துவுக்குள் எல்லாமானேன்

## பங்கில் திருப்பலிகள்

| தேதி | நேரம் | திருப்பலிகள் | விளக்கம் |
|---|---|---|---|
| ஜூலை 29 ஞா | காலை 8.30 | திருப்பலி (ஆ, த) | பொதுக்காலம் 17ஆம் ஞாயிறு |
| ஜூலை 30 திங் | காலை 6.30 | திருப்பலி (ஆ) | புனித பீட்டர் கிறிசோலோகு |
| ஜூலை 31 செவ் | மாலை 6.30 | திருப்பலி (ஆ) | புனித லொயோலா இஞ்ஞாசி |
| ஆக 2 வியா | காலை 6.30 | திருப்பலி (த) | புனித யூசேபியஸ் & பீட்டர் |
| ஆக 3 வெள் | மாலை 6.30 | திருப்பலி (த) | பொதுக்கால வாரநாள் |
| ஆக 4 சனி | காலை 6.30 | திருப்பலி (ஆ) | புனித ஜான் மரிய வியான்னி |
| ஆக 5 ஞா | காலை 7.00<br>காலை 9.00<br>மாலை 6.00 | திருப்பலி (த)<br>திருப்பலி (ஆ, ம)<br>திருப்பலி (த) | பொதுக்காலம் 18ஆம் ஞாயிறு<br>பொதுக்காலம் 18ஆம் ஞாயிறு<br>புனித செபஸ்தியார் சிற்றாலயம், முனிசிபல் |

## பங்கு நடவடிக்கைகள்

| | | | |
|---|---|---|---|
| ஜூலை 31 செவ் | காலை 8.30<br>மாலை 8.00 | பெர். மை 1-3<br>முனிசிபல் | பங்கு பரிந்துரை குழு<br>அருங்கொடை (த) |
| ஆக 1 புதன் | மாலை 8.00<br>மாலை 8.00 | பெர். மை 1-1<br>பெர். மை 2-3 & 2-5 | அருங்கொடை (த)<br>சீடத்துவ நிகழ்வுகள் |
| ஆக 2 வியா | மாலை 7.00<br>மாலை 7.30<br>மாலை 8.00 | ஆலயம்<br>பெர். மை 2-2<br>பெர். மை 1-3 | முன்னோன் & வாசகர் பயிற்சி<br>RCIA- புதிய வகுப்பு<br>எழுப்புதல் குணமளிப்பு செபமாலை |
| ஆக 3 வெள் | மாலை 8.00<br>மாலை 8.00<br>மாலை 8.00 | பெர். மை 1-1<br>ஜெலாப்பாங்<br>புந்தோங் தீகா | கிறிஸ்துமஸ் இன்னிசை இரவு 2018 சந்திப்பு<br>அருங்கொடை (த)<br>இரக்கமிகு ஆண்டவர் செபம் |
| ஆக 4 சனி | மாலை 5.30 | ஆலயம் | செபமாலை/ சகாய மாதா நவநாள் |
| ஆக 5 ஞா | காலை 8.30<br>காலை 10.30<br>மதியம் 12.00<br>மாலை 6.00 – 9.15 | பெர். மையம்<br>பெர். மையம்<br>ஆலயம்<br>பெர். மை 1-1 | மறைக்கல்வி (த)<br>மறைக்கல்வி (ஆ)<br>புனித சிசிலியா ஜூனியர் பாடல்குழு (த)<br>உறுதிபூசுதல் பெறவிருப்பவர்களின் ஒன்றுகூடுதல் |
| 29 ஜூலை 2018 மறைக்கல்வி வகுப்புகள் நடைப்பெறாது. மீண்டும் 5 ஆகஸ்டு 2018 வகுப்புகள் வழக்கம் போல் நடைபெறும். | | | |

<u>2018 ஆகஸ்டு மாத திருமணம்</u>

ஆக 18 மாலை 4.30 திருமணம் (த) ஜெப்ரி த/பெ ஸ்தெனிசிலாஷ் & மேரி ஃபுளோரென்ஸ் த/பெ எட்வர்ட் பாக்கியராஜ்

ஆக 25 மாலை 4.30 சடங்கு (ஆ) தன்வான் சிங் பன்னு த/பெ பல்தேவ் சிங் & எவலின் ஜெயந்தி ஆனந்தம்

ஏற்பாடு செய்யப்பட்டுள்ள திருமணத்தில் யாருக்காவது ஆட்சேபம் இருந்தால் குருவானவரிடம் உடனடியாக தெரிவியுங்கள்.

## பங்கு செய்தி மற்றும் தகவல்கள்

**1. உறுதிபூசுதல் பெறவிருப்பவர்களின் ஒன்றுகூடுதல்:** குருவானவர்கள் - ஆசிரியர்கள் - பெற்றோர்கள் - உறுதிபூசுதல் பெறுபவர்கள் ஒன்றுகூடுதல் (கட்டாயம்) **நாள்:** 5 ஆகஸ்டு 2018 (ஞாயிறு) **நேரம்:** மாலை 6.00 ~ இரவு 9.15 வரை **இடம்:** பெர். மையம் 1-1. தயவு செய்து நேரத்தோடு வாருங்கள். நிகழ்ச்சி திருப்பலியுடன் தொடங்கும்.

**2. மூத்தோர் பணிக்குழு:** அடுத்த ஒன்றுகூடுதல் 7 ஆகஸ்டு 2018 (செவ்) காலை 9.30க்கு பெர். மையத்தில் திருப்பலியுடன் தொடங்கும். 60 வயதுக்கு மேற்பட்ட பங்கு மக்கள் கலந்துக்கொள்ள வரவேற்கப்படுகிறீர்கள்.

**3. விடுமுறை:** புனித அன்னம்மாள் திருவிழாவை முன்னிட்டு பங்கு அலுவலகம் 29 ஜூலை 2018 அன்று மூடப்பட்டிருக்கும்.

**4. பாலினம் மற்றும் பெண்களின் உரிமைகள்:** பாலின சமத்துவம் பற்றி தெரிந்து கொள்ளவும், புரிந்து கொள்ளவும் ஆர்வமுள்ள எல்லா பெண்களையும் டோரத்தி பெஞ்சமின் வழி நடத்தும் இந்த ஒரு நாள் கலந்துரையாடல் அமர்வுக்கு அழைக்கின்றோம். **நாள்:** 12 ஆகஸ்டு 2018 (ஞாயிறு). **நேரம்:** காலை 9.00 ~ பிற்பகல் 4.00 வரை. **இடம்:** லாசால் மையம், ஈப்போ. **பதிவுக்கட்டணம்:** ரிம10.00 ஒரு நபருக்கு (மதிய உணவு, தேநீர் உட்பட). தொடர்புக்கு: கோரின் 012-3307693.

**5. கத்தோலிக்க திருமணமாகாதோர் சந்திப்பு மையம்:** (பினாங்கு மறைமாவட்ட குடும்ப வாழ்வு பணிக்குழுவுடன் இணைந்து) பின்வரும் ஒரு தங்கும் நிகழ்வுக்கு ஏற்பாடு செய்கிறது: நாள்: 15 முதல் 17 செப்டம்பர் 2018 (2 இரவுகள்/ 3 நாள்கள்) இடம்: ஸ்டெல்லா மேரிஸ், தஞ்சோங் பூங்கா, பினாங்கு. கட்டணம்: ரிம 200( தங்குமிடம், காலையுணவு, தேநீர் இடைவெளிகள், மதிய + இரவுணவு உட்பட). இறுதி நாள்: 27 ஆகஸ்டு 2018. உங்களுக்கு விபரங்கள் தேவைப்பட்டால், தயவு செய்து திரேசா வான், 017-578 8192 என்ற எண்களுக்கு தினசரி காலை 9.00 முதல் மதியம் 12.00 வரை சனி, ஞாயிறு தவிர்த்து அல்லது மின்னஞ்சல்: catholicdatinghub@gmail.com வழி தொடர்பு கொள்ளலாம்.

**6. 24 மணி நேரம் ஆயர் செபஸ்தியன் பிரான்சிஸ் அவர்களுடன் அனுபவத்தில் வாழ்தல்- ஆண்டு 2: யாருக்கு:** SPM & அதற்கு மேல் முடித்த தனித்த இளைஞர்களுக்கு. இந்த நிகழ்வு இறைப் பணி மற்றும் குருத்துவ தேவழைத்தலை கண்டறிய ஆர்வமுள்ளவர்களுக்காக வடிவமைக்கப்பட்டது. 4 ~ 5 ஆகஸ்டு 2018, சனி மதியம் முதல் ஞாயிறு மதியம் வரை. இடம்: ஸ்டெல்லா மேரிஸ் தியான மையம், 515U, Jalan Hashim, Tanjung Tokong , Pulau Pinang. கட்டணம் இல்லை. தங்கும் வசதியும் உணவும் வழங்கப்படும். ஆர்வமுள்ளோர் இணையம் வழி பதிவு செய்ய 016-4971408 என்ற எண்களைத் தொடர்பு கொள்ளவும்.

**7. பினாங்கு மறைமாவட்ட திருமணமாகாத இளம் முதியோர்:** பினாங்கு மறைமாவட்டத்திலுள்ள இளம் முதியோர்களுக்கான (22 - 40 வயது) ஒரு நோக்கத்தோடு இணைதல் எனும் பயனுள்ள தொடர்பு திறன்கள் பட்டறை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பேச, செவிமடுக்க, புரிந்து கொள்ள, நாம் ஏன் தொடர்பு கொள்கிறோம், நாம் என்ன தொடர்பு கொள்கிறோம், முரண்பாடான கருத்துக்களை ஆதரித்து நம்பிக்கையுடனும், தெளிவாகவும் பறிமாற்றம் செய்தல் போன்றவை பட்டறையில் இடம்பெறும். நாள் 18-19 ஆகஸ்டு (சனி, காலை 8.30 முதல் ஞாயிறு மாலை 4.00 வரை) இடம்: ஸ்டெல்லா மேரிஸ் தியான மையம், 515U, Jalan Hashim, Tanjung Tokong , Pulau Pinang. ஒற்றுமை பகிர்வு ரிம85 (உணவு + தங்குமிடம்) பதிவுக்கு இறுதி நாள் 12 ஆகஸ்டு 2018. தொடர்புக்கு: ஸ்டீவன் ராஜ்: 012-8380835 அல்லது பினாங்கு மறைமாவட்ட அலுவலகம்: 04- 2274851 மின்னஞ்சல்: pdsingleyoungadults@gmail.com

**8. பங்கு சந்தா: <u>உங்கள் கவனத்திற்கு,</u>** 2018ஆம் ஆண்டுக்காக 1283 உறைகள் வினியோகிக்கப்பட்டன. ஜூன் 2018 வரைக்கும் **509 (39.67%)** சந்தாதாரர்கள் மட்டுமே செலுத்திக்கொண்டிருக்கின்றனர். இன்னும் **774 (60.33%)** சந்தாதாரர்கள் செலுத்த தொடங்கவில்லை.

**9. திருமண திருப்பலிக்காக ரேலா உறுப்பினர்கள்:** திருமணத்திற்கு முன்பும், திருமணம் நடக்கும் பொழுதும் & திருமணத்திற்கு பின்பும், தேவையற்ற நடத்தைகள்/ தொடர்புகள் காணப்படுகின்றன. எனக்கு வேறு வழி இல்லை. ஆலயத்திற்கு உள்ளேயும், வெளியேயும் பரிசுத்தத்தையும், ஒழுங்கையும் பராமரிப்பதற்காக 2 ரேலா உறுப்பினர்களை அமர்த்த உள்ளேன். அதற்கான கட்டணம் திருமண கட்டணத்தில் சேர்க்கப்படும்.

**10. தேவழைத்தல் முகாம் 2018**: பினாங்கு மறைமாவட்ட தேவழைத்தல் குழு பொது தேவழைத்தல் முகாமை ஏற்பாடு செய்திருக்கிறது. "வந்து கண்டுபிடியுங்கள்" **நாள்:** 23 ஆக (காலை 10.00) ~ 25 ஆக (மதியம் 2.00) **இடம்:** புக்கிட் மெர்தாஜாம், புனித அன்னம்மாள் விடுதி **வயது**: (13 - 16) கட்டணம்: ரிம 30/- கலந்துகொள்பவர்கள்: அதிகபட்சம் 60 (30 ஆண்கள் & 30 பெண்கள். இறுதிநாள்: 31 ஜூலை 2018 தொடர்புக்கு: தந். மைக்கல் தாஸ் (012-5713910)/ இம்மானுவேல் துரை (016-4117214)

**11. அவே சிற்றாலய நிலவரம்: அன்னை வேளாங்கண்ணி சிற்றாலய கட்டிட திட்டத்தையொட்டி, நாங்கள் பின்வரும் நான்கு வழிமுறைகளை மேற்கொண்டுள்ளோம்:** அ) கட்டிட திட்டம் பற்றி அவே சிற்றாலய செயல்குழுவினரிடம் கலந்தாலோசித்தோம். ஆ) கட்டிட திட்டம் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் கலந்துரையாடவும்/ கருத்து அறியவும் எல்லா அதிச தலைவர்களும் அழைக்கப்பட்டனர். இ) சில தேவையான திருத்தங்கள் செய்யப்பட்டன. ஈ) நியமிக்கப்பட்ட கட்டிட வடிவமைப்பாளரிடம் நாங்கள் திட்டப்படத்தை சமர்ப்பித்துவிட்டோம். தற்போது தகுந்த ஆவணங்களைச் சமர்ப்பித்து ஈப்போ நகராண்மைக் கழக ஒப்புதலைப்பெறுவது கட்டட வடிவமைப்பாளரின் பொறுப்பாகும்.

**12. மேற்கு திசை அதிச-வின் காலை சிற்றுண்டி:** மேற்கு திசை அதிச 5, 12 மற்றும் 26 ஆகஸ்டு 2018 (ஞாயிறு) காலை 7.00 & 9.00 மணி திருப்பலிகளுக்கு பிறகு விற்பனை செய்யவுள்ளனர். கிடைக்கக்கூடிய பணம் கிறிஸ்து அரசர் சிற்றாலய கட்டிட நிதிக்கு சேரும். மதிய உணவு பொட்டலங்களாகவும் விற்கப்படும். தயவு செய்து உங்களது ஆதரவை தாருங்கள்.

**13. கிறிஸ்து அரசர் & அன்னை வேளாங்கண்ணி சிற்றாலய கட்டட நிதி ஜூன் 2018 வரை:** கிறிஸ்து அரசர் சிற்றாலயம்- **400,579.21** அன்னை வேளாங்கண்ணி சிற்றாலயம்- **450,985.19** (மாதத்திற்கு ஒருமுறை அன்றைய விபரம் வெளியிடப்படும்)

**22/07/18 திருப்பலி வசூல்கள்: காலை 7.00** - <u>RM 1,211.00</u> **காலை 9.00** - <u>RM 1,333.20</u> புந்தோங் தீகா- <u>RM 190.30</u>

மொத்தம் - <u>RM 2,734.50</u> 2018 - <u>RM 390.00</u> கல்லறை- <u>RM1,251.80</u>

நன்கொடைகளை பங்கு அலுவலகத்தில் ஒப்புக்கொடுக்கலாம். காசோலைகளில் புனித லூர்து மாதா தேவாலயம் என்று ஆங்கிலத்தில் எழுதவும்